<u>முதன்மை  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,பொள்ளாச்சி</u>

நாள்: 12.11.2025    அ.வ.எண். 307/2016 , வா.சா.1. முத்துவேல்  த/பெ. கிருஷ்ணசாமி

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு  பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>**

1) எனது அப்பாவின் அப்பா பெயர் ராமசாமிகவுண்டர் என்றால்சரிதான். ராமசாமி கவுண்டருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 4 பெண்கள், 1 ஆண் பிள்ளைகள் ஆவார்கள். வாரிசுரிமை படி எனது தகப்பனாருக்கும் 4 பெண்களுக்கும் சொத்துக்கள் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கும் அவரது சகோதரிகளுக்கும்  இடையே பாகப்பிரிவினை ஏதும் ஏற்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து பிரிபடாத சொத்து என்றால் சரிதான் இந்த சொத்திற்கு எனது தகப்பனார் மட்டும் உரிமையாளர் இல்லை என்றால் அன்றைய சட்டப்படி ஆண்மக்களுக்கு மட்டும் தான்  சொத்தில் உரிமை ஆகும். மேற்படி அதைப்பற்றி என்னுடைய வாதுரையிலோ, பிரமாண பத்திரிக்கையிலோ கூறவில்லை என்றால் சரிதான்.

2) தாவா சொத்து எனது தகப்பனாருக்கு முழுமையாக பாத்தியப்பட்டது அல்ல என்றும்  அதன் வழிப்படி எனக்கு முழுமையாக பாத்தியப்பட்டது என்று கூறுவதும் சரியல்ல என்றால் சரியல்ல. எனது அத்தைமார்கள் பற்றிய விவரங்கள் அவர்களுக்கு எப்போது திருமணம் நடைபெற்றது போன்ற விவரங்களை மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அவர்களின் உரிமைகளை மறைத்துள்ளதால் இந்த வழக்கானது என்னால் உண்மையான சங்கதிகளை கொண்டு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.  தாவா சொத்து எனக்குதான் சொந்தம் என்பதை நிரூபிக்க பதிவு செய்த ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், எங்களுக்கு பாத்தியப்பட்டது என்பதை

ஒப்பம்/-(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

காண்பிக்க ஆவணங்கள் கேட்டுள்ளேன், இதுவரை கேட்கவில்லை.

3)எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதை காண்பிக்க ஆவணங்கள் இல்லாமலேயே இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதியை அனுமதிக்கப்பட்ட சுவாதீனத்தில் நாங்கள் தான் வைத்தோம் என்பதை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது நண்பர் என்ற முறையில் அனுமதித்தோம். பிரதிவாதிகளுக்கு அனுமதிக்கப்பட்ட சுவாதீனம் கொடுத்தபோது அங்கு ஒரு ஷெட் இருந்தது அதற்கு மின் இணைப்பு, ஷெட்டுக்கான வரி விதிப்பு, தண்ணீர் இணைப்பு உள்ளது என்பதை காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் பஞ்சாயத்தில் பட்டா இல்லாமல் மேற்படி ரசீதுகள் கொடுக்கமாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள்.

4) பட்டாவும், ஆவணங்களும் இல்லாமல் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது அப்பா பெயரில் இருந்த அடங்கல் தாக்கல் செய்துள்ளேன். என்ன பரிகாரம் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதி சுவாதீனத்தை எங்கள் வசம் ஒப்படைக்க வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பட்டா, ஆவணங்கள் இல்லாமல், சுவாதீனத்தை ஒப்படைக்க வேண்டி பரிகாரமும் இல்லாமல் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வருவாய்துறை ஆவணங்களில் எனது பெயர் இல்லை என்றால் எனது அப்பா பெயர் உள்ளது அதை வைத்து தான் நான் வருகிறேன்.

5) தவறான முறையில் தாவா தாக்கல் செய்துள்ளதால் பிரதிவாதியின்

ஒப்பம்/-(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

அதிகபட்ச செலவுத் தொகையுடன் தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்தவித உரிமையும் இல்லாத நிலையில் இந்த தாவாவை தாக்கல் செய்வதற்கு எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

2, 3 பிரதிவாதிகளின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்/–(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.